புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நல்லதைச் செய்கிறபோது, பாராட்டக் கூடியவர். ஆகவே, நல்ல மனம் படைத்த அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், மாநகராட்சியினுடைய தனி அலுவலர் ஆகியோரோடு பேசி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையில் விரைந்து நல்ல முடிவுகளை நாங்கள் மேற்கொள்வோம் என்ற உறுதியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) அம்பாசமுத்திரம் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை மக்கள் பயனுக்குத் திறந்து விட வேண்டியதன் அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டிமுடிக்கப்பட்டுள்ள பாலத்தை இன்றுவரை பொதுமக்கள் பயனுக்குத் திறந்து விடாமல் இருப்பதால் பொதுமக்கள் அவதியுறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் மில் சாலை கி.மீ.1/0-ல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ. 65.00 லட்சம் செலவில் ஒரு பாலம் மீளக் கட்டப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் கட்டுமானப் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டபோதிலும், இப்பாலத்தின் அணுகு சாலைக்குத் தேவையான நில எடுப்பு இன்னும் முடிவடையாத காரணத்தினால் இப்பாலம் போக்குவரத்துக்குத் திறக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்தப் பாலத்தின் ஆலடியூர் பக்க அணுகுசாலைக்குத் தேவையான நில எடுப்பு 20-11-92-ல் முடிக்கப்பட்டு அணுகு சாலைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், விக்கிரமசிங்கபுரம் பக்க அணுகு சாலைக்குத் தேவையான நில எடுப்புக்கு 17-3-92 அன்றே மாவட்ட உதவி கலெக்டர் அவர்களால் இறுதி அவார்டு வழங்கப்பட்ட போதிலும் நில ஒப்படைப்பு முடிவடையும் முன்னர் நில உடமைக்காரரால் 18-12-92-ல் நில எடுப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெறப்பட்டுள்ளது. இதனை நீக்க எதிர்மனு 21-4-93-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத் தடை நீக்கப்பட்டு நில ஒப்படைப்பு முடிவடைந்து பின்னர் அணுகுசாலைப் பணி பூரணமாக முடிக்கப்பட்டு பாலப் போக்குவரத்துக்குத் திறந்து விடப்படும்.

திரு. ஆர். முருகையா **பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு கிட்டத்தட்ட 2 ஆண்டுக்காலம் ஆகிறது. இந்த ஆற்றின் அந்தப்புறத்திலே கிட்டத்தட்ட 20 கிராமங்கள் இருக்கின்றன. மேலும் அங்கே மதுரா கோட்ஸ் என்ற ஒரு நூற்பாலையும் இருக்கிறது. ஏற்கெனவே பக்கத்திலே பழைய பாலம் ஒன்று அங்கே இருந்தது. லாரிகள், வண்டிகள், பஸ்கள் எல்லாமே அந்தப் பாலத்தின் வழியாகத்தான் சென்று கொண்டிருந்தன. ஆனால், அந்தப் பாலம் பழுதடைந்து விட்டது. இனிமேல் வண்டி, வாகனங்கள் பழைய பாலத்தின் வழியாகப் போகக்கூடாது என்று தடை விதித்ததன் காரணமாக, இந்தப் பாலத்தை அவசரமாகத் திறந்து வைத்தால், பொதுமக்களுக்கு நலமாக இருக்கும் என்று அங்குள்ள பொதுமக்கள் விரும்புகிறார்கள். ஏற்கெனவே இந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் ஒப்புதல் கொடுத்த பிறகுதான் இந்த வேலை நமது அரசாங்கத்தால் துவக்கப்பட்டதாக நமது அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இப்போது அங்கே ஒரு தடையுத்தரவு வாங்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறீர்கள். தடையுத்தரவு வாங்குவதற்கும் நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்கிறார்கள். எனவே இந்தப் பாலத்தினுடைய அவசியம் குறித்து உயர்நீதிமன்றத்தில் இதற்காக விஷேச பெட்டிஷன் போட்டு தடை உத்தரவை நீக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே எல்லாம் தெளிவாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்குள்ளே போக விரும்பவில்லை. அப்ரோச் ரோடு என்று சொல்லப்படுகிற அணுகுசாலை அமைக்கின்ற பணியில்தான் இப்போது தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் உயர்நீதிமன்றத்தினுடைய தடை உத்தரவு. நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். தடையுத்தரவு வாங்கி இருக்கிறார்கள். அந்தத் தடை உத்தரவை நீக்கவேண்டும் என்று எதிர் மனு அரசின் தரப்பில் இருந்து தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தடை உத்தரவை ரத்து செய்ததற்குப் பின்னால்தான் பணிகளைத் தொடர முடியும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு அந்தப் பாலத்தைத் திறந்து விடுவதற்கான சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் நம்முடைய அரசும் அந்தத் தடையுத்தரவை ரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுத்து அந்தத் தடையுத்தரவை ரத்து செய்து அந்தப் பாலத்திற்கு அணுகுசாலைகளை அமைக்கின்ற பணிகளைப் பூர்த்தி செய்து விரைவில் அந்தப் பாலத்தைத் திறப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில், ரோடுகள், இணைப்புச் சாலைகள் எல்லாம் 95 சதவீதம் முடிந்துவிட்டது. இப்போது நிலத் தகராறில் வருகின்ற நிலத்தின் விஸ்தீரணம் 2 சென்ட்தான் இருக்கும். எனவே இந்த 2 சென்ட் நிலத்திற்காக அவர்கள் தடையுத்தரவு வாங்கி இருக்கிறார்கள். இருந்தாலும் கூட நம்முடைய அரசுக்கு நல்ல பெயர் இந்தப் பாலத்தின் காரணமாக வந்துவிடக்கூடாது என்கிற எண்ணம் இருக்கிறது. இன்னொன்று, அங்கே இருக்கிற மில் நிர்வாகத்தை மிரட்டும் வகையில் அவர்களிடமிருந்து ஏதாவது இலாபம் அடையலாமா என்பதைக் கருத்தில் கொண்டுதான் அந்தத் தடையுத்தரவு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தடையுத்தரவை விரைவில் நீக்குவதற்கு ஆவன செய்யவேண்டும். நம்முடைய அரசாங்கத்தின் வழக்கறிஞர்களிடமிருந்து இவ்வளவு நாட்களுக்குள்ளாக இந்தத் தடையுத்தரவு நீக்கித் தரப்படும் என்கிற வகையில் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? எவ்வளவு காலத்திற்குள் தடை உத்தரவை நீக்கித் தருவார்கள் என்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கோர்ட் முடிவு செய்ய வேண்டியது, அரசாங்கம் செய்யக்கூடியதல்ல.

1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் தாவா என்று சொல்கிறார்கள். எந்தத் தாவாவாக இருந்தாலும் கோர்ட்டிலே இருந்து ஒரு உத்தரவு வருகிறபோது அதுகுறித்து முழுமையாக தகுந்த தகவல்களை எல்லாம் தந்து, அதற்கான விளக்கங்களைக் கொடுத்து கோர்ட் தடை உத்தரவை ரத்து செய்ததற்குப் பிறகுதான் நாம் செய்ய முடியும். அதுதான் முறை. ஆகவே அது சம்பந்தமாக அரசு வழக்கறிஞர்களிடத்திலே சொல்லி இருக்கிறோம். உடனடியாக அந்த வழக்குகளை பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்த அரசும் துரிதமாக இருக்கிறது. வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள சதிபோல்தான் எங்களுக்கும் தோன்றுகிறது. இப்படி ஒரு சிறிய இடத்தை வைத்துக்கொண்டு மிகப்பெரிய போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கிற ஒருசிலருடைய தவறான அணுகுமுறை காரணமாகத்தான் சில திட்டப்பணிகள் கூட சில சமயத்தில் தடைப்பட்டுவிடுகின்றன. எனவே அரசின்மீது எந்தவிதமான குற்றமும் கிடையாது. வேகமாக அந்தப் பாலத்தைக் கட்டி முடித்து, அணுகுசாலைகளை அமைக்கின்ற நேரத்தில், எல்லாப் பணிகளையும் செய்து முடிக்கிற நேரத்தில் திடீரென்று இப்படி ஒரு தடையுத்தரவு பெற்று பிரச்சினை வந்திருக்கிறது. இதற்காக அரசின் சார்பில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மிக விரைவில் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப் பெற்று வழிவகை செய்யப்படும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்கச் (எண்2) சட்டமுன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1994) மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.